## 3.1 1998–1999 – நமக்கு நாமே திட்டம் – வழிகாட்டி நெறிமுறைகள் – ரூ.10 கோடி ஒதுக்கீடு

ஊரக வளர்ச்சி (ஒ.ஊவ.1) துறை

அரசாணை (நிலை) எண்.112 நாள் : 01.06.1998

படிக்க:

1) க.எண்.26314/ஊ.வ.(ஒ.ஊ.வ.1) 97, நாள். 25.06.97
2) க.எண்.38773ஏ(ஒ.ஊ.வ.1) 97, ஊ.வ.து, நாள்.12.09.07
3) நே.மு.க. எண்.5764/ஒ.ஊ.வ–1/98–1, நாள்.17.02.98 அரசு செயலர், ஊ.வ.து அவர்கள், ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை –15 அவர்களுக்கு முகவரியிட்டது
4) நே.மு.க. எண்.13723//98/ பொது–1, நாள்.30.04.98 ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை – 15 அவர்கள், அரசு செயலர், ஊரக வளர்ச்சித் துறை சென்னை –9 , அவர்களுக்கு முகவரியிட்டது

**ஆணை**

1997–98–ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ‘‘நமக்கு நாமே திட்டம் ‘‘ என்ற புதிய திட்டம் 1997–98 முதல் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்.

2. பார்வை 1–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் இத்திட்ட செயலாக்கத்திற்கான மேலோட்ட வழிமுறைகள் வெளியிடப்பட்டன. இந்த வழிமுறைகளில் கிராமத்தை வளர்ச்சி அடைய செய்ய வேண்டும் என்ற அடிப்படை நோக்குடன் பொதுமக்கள் தாங்களாகவே ஈடுபடுத்திக்கொண்டு அரசும், இணைந்து ஒரு குழுவாக இருந்து திட்டமிடுதல், செயல்படுத்துதல், மேற்பார்வையிடல் சமுதாயம் பயனடையும் வகையில் வளர்ச்சிப் பணிகளில் குழுவாக மக்கள் சபை ஈடுபட குறிப்பிடப்பட்டுள்ளது. கிராம சபை ஜனநாயக அமைப்பின் அடித்தளமாக இருப்பதால் இத்திட்டங்களை கிராம அளவில் உள்ள ஜனநாயக அமைப்பின் மூலம் செயல்படுத்தவேண்டிய அவசியம் கருதி, கிராம அளவில் உள்ள அலுவலர்கள் பலதரப்பட்ட திட்டங்கள் பற்றியும், நிதி ஒதுக்கீடு பற்றியும் எடுத்துரைக்க வேண்டிய அவசியம் பற்றி குறிப்பிடப்பட்டது. கிராம மக்களுக்கு தங்களுடைய கோரிக்கைகள் மற்றும் தேவைகளை முன்னுரிமைப்படுத்தும் வகையில் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். கிராம சபை மக்களுடைய தேவையை அறிந்து என்ன பணிகள் எடுத்துக் கொள்ளலாம் என்றும் எந்த பணிகளுக்கு மக்களின் நன்கொடை உழைப்பாகவோ, பணமாகவோ அல்லது பொருள் மற்றும் இதர ஏதாவது வழிகளில் வழங்கி சமுதாய சொத்துக்களை பராமரிக்க உதவிடும் என கண்டறிய வேண்டும்.

3. 1997, செப்டம்பர் 2 மற்றும் 3–ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட முடிவுகளைத் தொடர்ந்து மேற்கொண்ட வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. அதன்படி, (i) பொது மக்களிடமிருந்து இத்திட்டத்திற்காக, குறைந்தபட்சம் 25% பங்குத்தொகை பணமாகவோ, உழைப்பாகவோ அல்லது பொருளாகவோ பெற்றுக்கொள்ளலாம் என்றும் (ii) இத்திட்டத்திற்காக தானாக முன்வந்து நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் அல்லது அமைப்புகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்களுக்கு தகுந்த வெகுமதிகள் வழங்கலாம் என்றும், இதற்கான பிரேரணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும், (iii) குளங்கள், தூர் எடுக்கும்போது ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், குளங்கள் தூர் எடுப்பதால் மழை நீர் சேகரிக்கப்பட்டு வறட்சிக் காலங்களில் ஏழை மக்களுக்கு உதவவும், ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் செய்யப்பட வேண்டும் என்றும் (iv) மேலும் பள்ளிக் கட்டிடங்கள் அரசு நிலத்தில் மக்களைக் கொண்டு கட்டும்பொழுது தகுதிச் சான்றிதழ் பொதுப்பணி துறையிலிருந்து பெறப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

4. 1998–99–ம் ஆண்டு நமக்கு நாமே திட்டம் செயல்படுத்த தகுந்த நெறிமுறைகள் அனுப்பி வைக்குமாறு பார்வை 3–ல் காணும் நேர்முக கடிதத்தில் ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். பார்வை 4–ல் காணும் கடிதத்தில் 1998–99–ல் நமக்கு நாமே திட்டம் செயல்படுத்திட ஊரக வளர்ச்சி இயக்க நெறிமுறைகளை அனுப்பி வைத்துள்ளார்.

5. அரசு ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுப்பியுள்ள நெறிமுறைகளை கவனமாக பரிசீலித்து, 1998–99–ல் நமக்கு நாமே திட்டம் செயல்படுத்திட அவற்றை சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொண்டது. 1998–99–ல் நமக்கு நாமே திட்டம் செயல்படுத்த இந்த நெறிமுறைகள் இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு)

**3. NNT**

**6. 1998–99**–ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இத்திட்டத்திற்காக அரசு ரூ.**10.00** கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.**2.00** இலட்சம் வீதம் **385** ஊராட்சி ஒன்றியங்களுக்கு மொத்தம் ரூ.**7.70** கோடி ரூபாயை ஊரக வளர்ச்சி இயக்குநர் பெற்று மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கிட அதிகாரம் அளிக்கப்படுகிறது. மீதமுள்ள ரூ.**2.30** கோடியை (இணைப்பில் கண்டுள்ள) நெறிமுறைகள் பத்தி **3**–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி விடுவிக்கப்படும்.

**7.** அரசு இச்செலவினத்தை மேற்படி பத்தி **6**–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

> "**2515 – 00**– ஏனைய ஊ.வ. திட்டங்கள் – **800** ஏனைய செலவு – ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் ஜே. டபிள்யூ– நமக்கு நாமே திட்டம் செயலாக்கம் – **09**– உதவி மானியங்கள் ( த.தொ.கு.எண்.**2515 –.00–800** ஜே. டபிள்யூ **0907**)

**8.** இந்த ஆணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. அ.சா.கு எண்.**1926**/ FS/P/**98**, நாள். **14.05.1998.**

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## இணைப்பு

## நமக்கு நாமே திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகள்

## (அ.ஆணை நிலை எண்.112 ஊரக வளர்ச்சி (ஒ.ஊ.வ–1) நாள்.01.06.1998

1997–98–ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நமக்கு நாமே திட்டம் என்ற புதிய திட்டத்தை கிராம மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மக்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை முடுக்கிவிடும் நோக்குடனும் கிராம மக்களை திட்டமிட்டு செயலாக்கம் செய்து சுயவளர்ச்சியை நிலை நிறுத்திடவும் அறிவித்தார்கள். நமக்கு நாமே திட்டத்தின் அடிப்படை நோக்கம் கிராம அளவில் வளர்ச்சியினை கிராம மக்களின் சுயமுயற்சியால் தானாக ஏற்படுத்தி, சுய சார்பு நிலையில் நிலை நிறுத்தி வைப்பது ஆகும். "தனக்கு தானே உதவி" அணுகுமுறையில் மக்களே தங்களது தேவைகளை தாங்களே பூர்த்தி செய்துகொள்ள முன்வரவேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

முன்னுரிமை அடிப்படையில் தங்களது தேவைகளை அவர்களின் பங்கேற்புடன் செயலாக்கிட மக்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் தரப்படும். அதாவது குடிமராமத்து கொள்கையை மீள கொண்டுவருதல் அதுபோல் எல்லா சமுதாய சொத்துக்களையும் உருவாக்கி பராமரித்தல் விரிவுபடுத்துதல் போன்றனவே இதன் அடிப்படை நோக்கமாகும். அரசே ஒரு கிராமத்திற்குத் தேவையான அனைத்து வகையிலான பணிகளையும் நிர்ணயித்து முடிவெடுக்காமல் அந்த மக்களின் தேவைகளை அவர்களே அறிந்து முன்னுரிமை அளிக்க வேண்டியவைகளையும் அம்மக்களே நிர்ணயித்து வளர்ச்சித் திட்டத்தில் சமுதாய பங்குடன் துரித செயலாக்கம் செய்ய ஊக்கப்படுத்தப்படுவர். இந்த மொத்த செயல்முறையில் அரசு தூண்டுகோலாகவே இருக்கும்.

### 1. நமக்கு நாமே திட்டத்தின் நோக்கம்:

I) நமக்கு நாமே திட்டம் கிராம பகுதியோ நகர பகுதியோ அனைத்து பகுதிகளுக்கும் பொருந்தும். உள்ளூர் மக்களின் தேவையினைத் தேர்ந்தெடுத்து பங்கினை செலுத்தி தங்களை ஈடுபடுத்திக் கொண்டு செயல்படுவதே இதன் அடிப்படைக் கொள்கையாகும்.

II) பொது மக்களின் தேவைகள் இடத்திற்கு இடம் மாறுபடும். எனவே, ஒரே மாதிரியான திட்டங்களை செயல்படுத்தவோ அல்லது தேவையான நடவடிக்கையினை தேர்வு செய்வதில் கடுமையான விதிமுறையோ விரும்பத்தக்கதல்ல. ஆனால், எடுத்துச் செய்யப்படும் திட்டங்கள் அடிப்படையில் மக்களின் விருப்பத்தின் பேரில் இருக்க வேண்டும். புதிய சொத்துக்கள் உருவாக்குவதற்கோ அல்லது ஏற்கனவே ஏற்படுத்திய சொத்துகளை பராமரிப்பதற்கோ இத்திட்டத்தைப் பயன்படுத்தலாம்.

III) நமக்கு நாமே திட்டம் மக்களிடையே பரவலாக்க சிறப்பு நிதி அரசால் வழங்கப்படினும் இதர வளர்ச்சி திட்டங்களான ஒருங்கிணைந்த ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டம், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், மத்திய அரசு சுகாதார திட்டம், நாடாளுமன்ற உள்ளூர் வளர்ச்சித் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டம், மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம் போன்ற திட்டங்களின் மக்களின் பங்கையும் இணைத்து செயல்படுத்தினால் அரசு ஒதுக்கீட்டில் அதிக பலன் பெற முடியும். எனினும், இரண்டு திட்ட நிதிகள் ஒரே பணிக்கு அல்லது திட்டங்களுக்கு ஒருமுகப்படுத்தக்கூடாது. ஏனெனில், கணக்குப் பணம் பட்டுவாடா செய்யும்பொழுது இரண்டு திட்ட நிதிகள் ஒரு பணிக்கு அல்லது திட்டங்களுக்கு ஒருமுகப்படுத்தினால் கணக்கு பராமரிப்பில் சில சிக்கல்கள் உண்டாக வாய்ப்புள்ளது.

IV) தேர்ந்தெடுக்கப்படும் பணி, நிதி தொடர்பான திட்டமாக இருக்க வேண்டுமென்பதில்லை. சுகாதாரம் மற்றும் துப்புரவு, நோய் தடுப்பு, கல்லாமை ஒழித்தல், இலவச மருத்துவ பரிசோதனை கிராமத்தின் சுற்றுப்புற சூழல் பெருமளவில் மேற்கொள்ளல் முதலியன விழிப்புணர்ச்சி மற்றும் நலிந்த பிரிவின் சமுதாய வளர்ச்சிக்கு அதிகாரம் வழங்குதல் போன்ற நிதியில்லாத தேவைகளையும் மேற்கொள்ளலாம்.

V) உள்ளாட்சி திட்டப் பணிகள், மட்டுமே எடுக்க வேண்டுமென வரையறுக்கப்பட வேண்டியதில்லை. எந்தத் துறை பணியாயினும் அதாவது பொதுப்பணித்துறை, மின்சாரம், ஆதிதிராவிடர் நலம் , பிற்பட்டோர் நலம் , நெடுஞ்சாலைகள், சுகாதாரம் விளையாட்டுகள் முதலிய துறைகள் சம்பந்தப்பட்ட பணிகளையும் அத்துறையின் ஒப்புதலுடன் நமக்கு நாமே திட்டத்தில் எடுத்து மக்களால் செயல்படுத்தலாம்.

VI) கீழ்க்கண்ட திட்டப் பணிகள் நமக்கு நாமே திட்டத்தில் எடுக்கலாம். இவை எடுத்துக்காட்டுகளேயன்றி முழுமையானதல்ல.

## 3. NNT

1.1) கட்டிடங்கள் கட்டுதல், பரிசோதனைக் கூடங்கள், பள்ளி கழிவறைகள், மருந்தகங்கள், நூலக அறைகள், விடுதிகள், சத்துணவு மையங்கள், தொலைக்காட்சி வைக்கும் அறைகள், பொது விநியோகக் கடைகள் மற்றும் இதுபோன்ற கிராமத்தின் சமுதாயச் சொத்துக்களான குடிதண்ணீர் வசதி உருவாக்குதல் முதல் கட்டிடங்களுக்கு வெள்ளையடித்தல் உள்பட பல பணிகள் மக்கள் தேவைக்கேற்ப எடுக்கலாம்.

1.2) குளம், கால்வாய், குட்டை, ஊரணிகள் போன்ற சிறு பாசனங்கள் தூர்வாருதல் மதகுகள், தடுப்பு சுவர்கள், கால்வாய்கள் முதலியன உருவாக்குதல் மற்றும் மேம்பாடு செய்தல்.

1.3) பாலம் , சிறுபாலம் மற்றும் புதிய சாலைகள் அமைத்தல், சாலைகள் மேம்படுத்துதல், ஜல்லி அல்லது தார்ச்சாலையாக்குவது மற்றும் புதுப்பித்தல்.

1.4) பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், போக்குவரவு தீவுகள், நீரூற்று, தெருவிளக்குகள் முதலியன கீழ்க்கண்ட சில விதிமுறைகளுக்கு உட்பட்டு மேம்பாடு செய்தல் மற்றும் பராமரித்தல்.

அ) சொத்தை நிர்வகிக்கும் அலுவலரின் முன் அனுமதி இல்லாமல் நிரந்தர கட்டிடம் கட்டக்கூடாது.

ஆ) விளம்பரம் செய்யும் அலுவலர் சொத்தின் மீது எந்த அதிகாரமும் செலுத்தக்கூடாது.

இ) மதச்சார்பு தொடர்பான கட்டிடங்கள் இந்நிலத்தில் கட்டவோ அல்லது நிறுவவோ கூடாது.

ஈ) அரசியல் சின்னங்கள் இந்த இடத்தில் வைக்கப்படக்கூடாது.

உ) நிலத்தின் மதிப்பு பாதிக்காமல் மற்றும் சொத்து எந்தவித சேதமின்றி விளம்பரம் செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும்.

ஊ) பரஸ்பர ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் பராமரிப்பு மேம்படுத்துதல் தொடர்பான அனுமதி ஆதரவாளர் பராமரிப்பில் போதிய ஆர்வம் காட்டவில்லை என்று கருதினால் கொடுக்கப்பட்ட அனுமதி இரத்து செய்யப்படும்.

1.5) உள்ளூர் மக்களின் நிதி அல்லது நிதி அல்லாத வேறு எந்த திட்டத்தினையும் வெளிப்படையாக தெரிவித்தல், உதாரணமாக ஒட்டுமொத்தமாக தூய்மைப்படுத்துதல், மரம் நடுதல் போன்ற பணிகள்.

### 2. நமக்கு நாமே செயல்முறை:

நமக்கு நாமே செயல்முறை கிராமங்களை தேர்வு செய்தல், திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் அதன் பலனை நிலை நிறுத்தச் செய்தல் போன்றவை உள்ளடங்கும்.

### 2.1 நமக்கு நாமே குழுக்கள் அமைத்தல்:

நமக்கு நாமே திட்ட நடவடிக்கைகள் பல கிராமங்களில் ஒரே சமயத்தில் ஆரம்பித்து மக்களிடையே இக்கருத்து பரவலாக்கப்பட வேண்டுமாதலால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஊக்குவிக்கும் சிறப்பு நமக்கு நாமே குழு அமைக்கலாம். இக்குழுக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட வருவாய் அலுவலர் / திட்ட அலுவலர் / துணை மாவட்ட ஆட்சித்தலைவர் / உதவி திட்ட அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் தலைமையில் செயல்படலாம். சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) இதற்கான அமைப்பாளராக இருப்பார். குழு தானே சமுதாய பணியில் நாட்டமுள்ள ஓரிரண்டு அரசு அலுவலர்கள் மற்றும் அரசு அல்லாத நிறுவனம் அல்லது தன்னார்வு முகமைகளிலிருந்து ஒருவர் கொண்டதாக அமையும். இத்தகைய தன்னார்வப் பணிகளுக்கு கருத்துக்களை சரியான முறையில் வெளிப்படுத்தி மக்களை ஊக்குவித்து இயங்கச் செய்யும் தன்மை கொண்ட நபர்கள் இக்குழுவின் அங்கத்தினர்களாக இருப்பது சாலச்சிறந்தது.

### 2.2 கிராமங்கள் தேர்வு செய்தல்:

நமக்கு நாமே திட்டத்தில் எந்த கிராம பணிகளையும் எடுத்துச் செய்யலாம். போதுமான அளவு கிராமங்கள் முன்வரவில்லை என்றால் நமக்கு நாமே குழு, ஊராட்சித்தலைவர் மற்றும் பொதுமக்களை இத்தகைய தன்னார்வப் பணிகளுக்காக ஊக்கப்படுத்தவேண்டும். எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளை ஒரே நேரத்தில் செயல்படுமாதலால் நமக்கு நாமே திட்டப் பணியை ஒரு ஆண்டில் ஒரு வட்டாரத்தில் குறைந்தது ஆறு கிராமங்களில் ஊக்குவித்து பணி செய்வதில் சிரமம் இருக்காது. எனினும், அதிக எண்ணிக்கைகளில் கிராமங்களை எடுத்துக்கொண்டால் சிறப்பாக இருக்கும். ஊக்குவிக்கும் குழு கிராமங்களுக்கு வருகை தந்து பொது மக்களின் பிரதிநிதி மற்றும் கிராமத் தலைவர்களுடனும், சென்று ஊர் மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்துவர். அவரிடம் நமக்கு நாமே திட்டத்தில் கொள்கைகளை மற்றும் அதன்

உள்ளூர் வளங்களை அதிகபட்சம் பயன்படுத்திட எடுத்துரைப்பர். உள்ளூர் திட்டங்கள், செயல்முறைகள் மற்றும் பராமரிப்பு வளர்ச்சிப் பணிகளில் அவர்களின் ஈடுபாட்டினால் ஏற்படும் பயன்களை குறித்து விளக்குவர்.

**2.3 திட்டம் :**

ஊக்கப்படுத்துதல் தேவைகளை முன்னுரிமையளித்தல், பணிகள் தொடர்பான பட்டியல் தயார் செய்தல், செயல் திட்டம் மதிப்பீடு தயாரித்தல் முதலிய திட்டமிடுதலில் அடங்கும்

நமக்கு நாமே திட்டத்தில் கிராமங்கள் தேர்வு செய்தவுடன் சிறப்பு குழு ஊராட்சித் தலைவர் கிராம சபா கூட்டத்தினை முடிந்தவரை மாலை 4.00 மணிக்கு மேல் கூட்ட உதவி செய்ய வேண்டும். ஊராட்சித் தலைவரே இக்கூட்டத்தினை நடத்திட முக்கிய பங்கேற்க வேண்டும். இதர தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சட்டமன்ற உறுப்பினர் உள்பட இக்கூட்டத்தின் நடவடிக்கைகளில் தீவிர பங்கு கொள்ள உற்சாகப்படுத்த வேண்டும். இருப்பினும் அலுவலர்கள் இணைப்பு பாலமாகவே செயல்படுவர். ஊராட்சி மன்றத் தலைவர்க்ள் மக்களிடமிருந்து பெறப்பட்ட நமக்கு நாமே திட்ட கருத்துக்களை கலந்து ஆராய்ந்து திட்டங்களை அதன் முக்கியத்துவம் அறிந்து முன்னுரிமை அளித்து திட்டம் தயாரிக்க வேண்டும். அவர்கள் நடத்திக் கொண்டிருக்கம் திட்டங்களிலிருந்து நமக்கு நாமே திட்டத்தை ஒருமுகப்படுத்தி செயல்பட ஊக்குவிக்கப்பட வேண்டும். ஊக்குவிக்கும் குழு கிராம ஊராட்சி மன்றத்திற்கு பொதுமக்கள் பங்கின் உண்மை நிலையைக் கருத்தில் கொண்டு தேவையான நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்த உதவ வேண்டும். கிராம சபா கூட்டத்தில் திட்டப் பணிகள் பட்டியல், பொதுமக்களின் நன்கொடை, செயல்படுத்தும் நேரம், செயல்படுத்த நிதி முதலியன இறுதியாக்கப்பட்டு பட்டியல் தயார் செய்ய வேண்டும். நமக்கு நாமே திட்டக்குழு, பங்குத் தொகை வசூலித்தல், மதிப்பீடுகள் தயார் செய்தல், தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஒப்பளிப்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பெறுதல் ஆகிய பணிகளுக்கு தொடர்ந்து ஏற்பாடு செய்வார்கள்.

**2.4 செயல்பாடு:**

செயல்பாட்டு நிலையில் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி அளித்தல் பணிகள் தொடங்குதல் மற்றும் முடிவாக்குதல் பட்டியல்களை முடித்தல் முதலியன அடங்கும். பணிகள் சரியான முறையில் நடத்திட கிராம மக்களே தங்களிடையே பொறுப்பான நபர்களைக் கொண்டு ஒரு நிர்வாகக் குழு அமைக்கலாம்.

அனைத்து நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதிகள் மாவட்ட அளவிலேயே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

நிர்வாக மற்றும் தொழில் நுட்ப அனுமதிகள் பெற்றதும் உடன் பணிகள் துவங்கப்பட வேண்டும். சார்புடைய துறையின் தொழில் நுட்ப பிரிவு காலதாமதமின்றி இடத்தை அடையாளமிட வேண்டும். இந்த தொழில்நுட்ப பிரிவு, செயலாக்கம் எவ்வப்போது தேவை ஏற்படுகிறதோ அப்பொழுது மேலளவு ஆகியவைகளை தொடர்ந்து செய்யும். பணி முடிந்ததும் பட்டியல் சரிசெய்திட இறுதி மேலளவு மேற்கொள்ளப்பட வேண்டும். பணி முடிவு பெற்றதற்காக முடிவு அறிக்கை அந்த தொழில் நுட்ப பிரிவால் தயாரிக்கப்பட வேண்டும்.

பணி நடைபெறும்பொழுதே பணியின் நிலையினை மக்களுக்கு எடுத்துக்கூற கிராம சபா மீண்டும் கூடலாம்.

**2.5 நிலை நிறுத்துதல் :**

பணி முடிவு பெறுதல், பராமரிப்பிற்கான ஏற்பாடு மற்றும் கிராமத்தின் இதர முக்கிய தேவைகளை நமக்கு நாமே திட்ட கொள்கைகளின்படி விரிவுபடுத்துதல் முதலிய நிலை நிறுத்தலில் அடங்கும்.

மக்களின் பங்குடன் உருவாக்கப்பட்ட சொத்துகளை தொடர்ந்து பராமரித்திட கிராமவாசிகள் பயனாளிகள் குழு அமைக்க வேண்டும். உள்ளூர் திட்டம் செயலாக்கம் மற்றும் பராமரிப்பு மூலம் இத்தகைய பணிகளை மேற்கொள்ள ஊக்கப்படுத்தப்படலாம். பணிகள் முடிவு பெற்ற பின்னர் கிராம சபா மீண்டும் கூட்டப்பட்டு நிலைமையை ஆராய்ந்து வருங்காலத்திற்கும் இதுபோல் தொடர்ந்து திட்டமிடலாம்.

**3. நிதி:**

நமக்கு நாமே திட்டம் பரவலாக்க அரசு ரூ.10.00 கோடி வழங்கியுள்ளது. அதில் ரூ.7.70 கோடி உடனடியாக எல்லா மாவட்டங்களுக்கும் வட்டாரம் ஒன்றிற்கு 2 இலட்சம் வீதம் வழங்கப்படும். நிதி ஒதுக்கீடு ஒருமுகப்படுத்தப்பட முடியாத திட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள பணிகளுக்கு நமக்கு நாமே சிறப்பு நிதி உபயோகப்படுத்திக் கொள்ளலாம். எஞ்சியுள்ள தொகை ரூ.2.30 கோடியை நான்கு காலாண்டு தவணைகளில் தவணை ஒன்றிற்கு ரூ.50 இலட்சமாக வழங்கப்படும். இந்தத் தொகைகளை செலவு செய்த பிறகு மீதமுள்ள ரூ.30 இலட்சத்தை ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்து முன்மொழிவு பெறப்பட்ட பின்னர் அனுமதிக்கலாம். மேலும், குறிப்பான கருத்துருக்கள் மற்றும்

சிறந்த மாவட்டங்களுக்கு ஊக்குவிக்கும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் பொது மக்களின் தேவை அடிப்படையில் இச்சிறப்பு நிதி விடுவிக்கப்படும்.

### 4. பொது மக்கள் பங்குத் தொகை :

பொதுமக்கள் பங்குத் தொகை பணமாகவோ, உழைப்பாகவோ அல்லது வேலைக்குத் தேவைப்படும் பொருட்களாகவோ இருக்கலாம். ஒவ்வொரு பங்குத் தொகை விளக்கமான வழிமுறைகள் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

### 4.1 பங்குத் தொகை – பணமாக :

பணமாக பெறப்படும் அனைத்து பங்குத் தொகையையும் மாவட்ட ஆட்சித்தலைவரால்தான் பெறப்பட வேண்டும். இது நமக்கு நாமே திட்டக் கணக்குத் தலைப்பில் காசோலையாகவோ அல்லது வங்கி வரைவோலையாக பெற்று அதற்கென திறக்கப்படும் தனிக்கணக்கில் வரவு வைக்க வேண்டும். இவ்வாறு பெறப்படும் அனைத்து பங்குத் தொகைக்கும் ஒப்புதல் இரசீது கொடுக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இதற்கென தனியாக ஒரு பதிவேடு திறந்து பணமாகப் பெற்ற பங்குத் தொகை கணக்கினை பராமரிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் பெயரில் ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் இந்த கணக்கு மற்றும் பதிவேடுகளை பராமரித்து வருவார். மாவட்ட ஆட்சித்தலைவரைத் தவிர வேறு எந்த ஒரு நபரும் அல்லது நிறுவனமும் பணமாக பங்குத் தொகை பெற அனுமதிக்கப்படமாட்டாது. ஏற்கனவே, இருக்கும் அரசு திட்டங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படும் நமக்கு நாமே திட்டப் பணிகளுக்கும் பங்குத் தொகை பணமாகப் பெற்று நமக்கு நாமே திட்டக் கணக்கில் வரவு வைத்து, இந்தப் பங்குத் தொகையினை மேற்படி வேலைக்கான நிர்வாக அனுமதி வழங்கிய பின்னர் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனத்திற்கோ அல்லது துறை அலுவலருக்கோ பங்குத் தொகையினை விடுவிக்க வேண்டும்.

### 4.2 பங்குத் தொகை – பொருளாக:

செங்கல், மணல், கதவு சன்னல் மற்றும் உபகரணங்கள் போன்ற பொருட்களாகவும் பொதுமக்கள் பங்குத் தொகையாக வழங்கலாம். இவ்வாறு தரப்படும் பொருட்கள் மேற்படி வேலைக்கு நிர்வாக அனுமதி வழங்குமுன்னர் சம்பந்தப்பட்ட பணி நிறைவேற்றும் அல்லது கண்காணிக்கும் உள்ளாட்சி நிறுவனத்திடமோ அல்லது துறைஅலுவலர்களிடமோ ஒப்படைக்க வேண்டும். இதற்கென தனியாக இருப்புப் பதிவேடு ஒன்று திறக்கப்பட்டு வரவு செலவு தனியாக கண்காணிக்கப்படும். பொருட்களாக வழங்கப்பட்ட பங்குத் தொகையின் மதிப்பீடு வேலை சம்பந்தப்பட்ட பொறியியல் துறையினரால் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைப்பட்டியலுக்கு ஒப்ப மதிப்பீடு செய்யப்படும். பொதுமக்களால் மற்றும் தனியார் நிறுவனத்தினரால் செய்யப்படும் வேலைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களிடமிருந்து பெறப்பட்ட பொருட்களும் மேற்படி வேலையைச் செய்யும் கண்காணிக்கும் உள்ளாட்சி நிறுவனம் அல்லது அரசுத்துறை அலுவலர்களால் பெறப்பட்டு மொத்தமாக வேலை செய்யும்போது பணி செய்பவர்களுக்கு வழங்கப்படும்.

### 4.3 பங்குத் தொகை – உழைப்பாக:

பொதுமக்கள் இலவசமாக வேலை செய்து பங்குத் தொகை வழங்கலாம் என்பது அனுமதிக்கக்கூடியதாக இருந்தாலும் இதன் பொருட்டு வறுமையில் வாடும் ஏழை மக்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு பெறப்படும் பங்குத் தொகை யாருடைய வற்புறுத்தலும் இல்லாமல் பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து இயல்பாக வழங்கக்கூடியதாக இருக்க வேண்டும். உழைப்பாக பொதுமக்கள் பங்கு வழங்கும்போது பொது மக்கள் பங்குத் தொகையில் வேலையின் மதிப்பு அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட விலைப்பட்டியலில் உள்ள அலகுத் தொகையின்படிதான் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இத்தகைய வேலைகளுக்கு நிர்வாக அனுமதி மதிப்பீட்டுத் தொகைக்கு வழங்கினாலும் பணம் பட்டுவாடா செய்யும் பொழுது பொதுமக்கள் இலவச உழைப்பாக வழங்கிய பங்குத் தொகையினை கழித்துவிட்டு மீதமுள்ள தொகை மட்டுமே பணம் பட்டுவாடா செய்ய வேண்டும். ஆனால், இதன்பொருட்டு குறிப்பாக தூர் வாருதல் மற்றும் புதிய சாலை அமைத்தல் போன்ற பணிகளில் வேலையின் மதிப்பீட்டினை உயர்த்திக் காட்டாமல் இருக்குமாறு எச்சரிக்கையாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

### 5. பணி செயல்படுத்தும் முறை :

5.1 இத்திட்டத்தின் கீழ் சமுதாய அமைப்பின் பங்கோடு பணிகளை நிறைவேற்ற தனி நபர்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள் நன்கொடை, வழங்குவோர்கள், வள்ளல்கள், தனி அல்லது பொது நிறுவனங்கள், கம்பெனிகள், வியாபார சங்கங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்கள், குடியிருப்போர் சங்கங்கள், அறக்கட்டளைகள், ரோட்டரி சங்கம் மற்றும் அரிமா சங்கங்களை இப்பணிக்காக எடுத்துச் செய்யலாம். இவர்கள் சொத்துக்களை உருவாக்கவும் பராமரிக்கவும் உதவி செய்யலாம்.

5.2 வேலைக்கான உத்திரவு மேற்படி வேலையைச் செய்ய உள்ளாட்சி நிறுவனங்களுக்கோ, அரசு துறை அலுவலருக்கோ நன்கொடை வழங்குபவருக்கோ, தனியார் நிறுவனத்திற்கோ மற்றும் பிரிவு 1–ல் குறிப்பிட்டவர்களுக்கோ வழங்கலாம். இந்த வேலைகளை தனியர் நிறுவனங்கள் சங்கங்களோ, பொதுமக்களோ செய்வதானாலும் இதற்கான பணம் மேற்படி வேலையை மேற்பார்வையிட பொறுப்பாக்கப்பட்டிருக்கும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனத்தினராலோ அல்லது அரசு துறை அலுவலர் மூலமோ வழங்கப்படும். இந்த மாதிரி வேலைகளில் அளவு மேலளவு சம்பந்தப்பட்ட பொறியியல் துறையினரால் எடுக்கப்பட்டு இதற்கான பட்டியல்கள் அனுமதிக்கப்பட்டு மற்ற அரசு துறை திட்டங்கள் செயல்படுவதுபோல் வேலைப்பட்டியல்கள் அனுமதிக்கப்படும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி வேலைகளில் பொறுத்தமட்டில் பொதுப்பணிதுறையினர் வேலைகளை மேற்பார்வையிடுவதோடு கூட கட்டிட அமைப்பிற்கான உறுதிச் சான்றிதழும் வழங்க வேண்டும்.

5.3 முழுமையாக 100 % பொதுமக்கள் பங்குத் தொகையின் நிறைவேற்றப்படும் வேலைகளை பயன்படுத்தும் சங்கத்தினரிடமோ நன்கொடையாளர்களிடமோ அவர்கள் வேலை செய்ய விருப்பம் தெரிவித்தால் நமக்கு நாமே திட்டக் கணக்கில் முன்னதாக முன்பணம் செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தாமல் வேலைகளை ஒப்படைக்கலாம். ஆனாலும், வேலைகள் அரசால் நிர்ணயித்த வடிவமைப்புகள் மற்றும் கட்டிட உறுதிக்கான நிபந்தனைகள் மற்றும் மேலளவுகளுக்கு உட்பட்டு செயல்படுத்த வேண்டும்.

5.4 நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எந்தவொரு அரசுத் துறையைச் சார்ந்த் பணிகளையும் எடுத்துச் செய்யலாம். பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில் இந்த வேலைகளைச் செய்வதற்கான ஆட்சேபணை இல்லா சான்று சம்பந்தப்பட்ட துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்கள் வழங்கலாம். இவ்வாறு சான்றிதழ் வழங்குவதில் தேவையற்ற அல்லது வேண்டுமேன்றே சம்பந்தப்பட்ட துறை தாமதம் ஏற்படுத்தினால் மாவட்ட ஆட்சித்தலைவர் காரணமில்லாமல் காலதாமதம் நேரிட்டுள்ளது என்பதை உறுதி செய்து கொண்டு அவரே பொது நன்மை கருதி ஆட்சேபணை இல்லா சான்று வழங்கலாம். இவ்வாறு வழங்கப்பட்ட இனங்களுக்கு மாவட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவினரின் பின்னேற்பு பெறலாம்.

5.5 வேலைகளுக்கான மதிப்பீடு வழக்கமாக அரசால் செய்யப்படும் பணிகளுக்கு அந்த வேலைகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட அலகுத் தொகை அடிப்படையிலும் இதர வேலைகளுக்கு அந்த ஆண்டில் அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட விலைப்பட்டியல் படியும் மதிப்பீடு தயார் செய்ய வேண்டும். இந்த வேலைகளுக்கான மதிப்பீடு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனத்திற்கு அல்லது அரசுத்துறைக்கான நிர்ணயிக்கப்பட்ட பொறியியல் அதிகாரம் அளிக்கப்பட்ட நபர்கள் அனுமதிக்க வேண்டும். தனியார் தயாரித்த மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இந்த வேலைகளுக்கு எந்தவதி முன்பணமும் வழங்கக்கூடாது. வேலைகள் அதிகாரம் அளிக்கப்பட்ட பொறியியல் துறையினரால் மேலளவு செய்யப்பட்டு தயார் செய்த பகுதி அல்லது இறுதி பட்டியலில் அடிப்படையில் பணம் வழங்கப்பட வேண்டும். எந்தவித காரணம் கொண்டும் செய்த வேலையின் மதிப்பீட்டிற்கு அதிகமாக பணம் பட்டுவாடா செய்யக்கூடாது.

5.6 இந்த வேலைகளுக்கு தொழில்நுட்ப அனுமதி அளிக்கும் அதிகாரம் பிற அரசு திட்டங்களில் செயல்படுத்தும் வேலைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகார வரம்பின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட வேண்டும். இதற்கான இம்மாதிரியான வேலைகளை அரசுத் திட்டங்களின் கீழ் செயல்படுத்தும்பொழுது நிர்வாக அனுமதி வழங்க அதிகாரம் பெற்ற அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவரின் ஒத்திசைவு பெற்றே நிர்வாக அனுமதி வழங்குவார். ஊரக பகுதிகளில் நிறைவேற்றப்படும் பணிகளுக்கு தொழில் நுட்ப அனுமதி ஊரக வளர்ச்சித்துறையின் பொறியியல் பிரிவுகளுக்கு நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சித்தலைவரும் வழங்குவார். நகர பகுதிகளில் அல்லது அரசுத் துறையினரால் செயல்படுத்தப்படும் வேலைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் பொறியியல் பிரிவு தொழில்நுட்ப அனுமதியும் மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு பெற்றே இம்மாதிரி வேலைகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் நிர்வாக அனுமதியும் வழங்குவார்.

5.7 வேலைகளுக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி முழு மதிப்பீட்டு தொகைக்கு வழங்கலாம். ஆனால் பணம் பட்டுவாடா செய்யும்பொழுது வேலைக்கென உழைப்பும் பங்கு பெறப்பட்டிருந்தாலும் பொருட்கள் பங்குத் தொகையான பெறப்பட்டிருந்தாலும் மேற்படி பங்குத் தொகையின் மதிப்பீட்டினை கழித்துவிட்டு பணம் கொடுக்க வேண்டும். பணம் ரொக்கமாக பங்குத் தொகையாக வழங்கியிருந்தால் பணியின் முன்னேற்றத்திற்கு தக்கவாறும் பட்டுவாடா செய்யலாம்.

5.8 இத்திட்டத்தின் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு பணியும் தனிநபர்கள் செய்வதானாலும், நிறுவனங்கள் செய்வதானாலும், அரசுத் துறை செய்வதானாலும் எல்லா வேலையும் சம்பந்தப்பட்ட துறையின் பொறியியல் பிரிவின் வழி முறைப்படிதான கண்டிப்பாக செய்ய வேண்டும். இந்த வேலைகளில் ஏற்படும் தரக்குறைபாடுகள் மற்றும் இதர குறைபாடுகளுக்கு வேலையை மேற்பார்வையிடும் சம்பந்தப்பட்ட பொறியியல் பிரிவே முழு பொறுப்பு ஆக்கப்படுகிறது.

**6. பணி முன்னேற்றத்தை கண்காணித்தலும் மதிப்பிடுதலும் :**

I) கிராம சபா பின்வரும் மூன்று கட்டங்களில் கூட்டப்பட வேண்டும். அதாவது திட்டமிடுதல், நிறைவேற்றுதல், வேலை முடிவுற்றபின் வட்டார அளவிலான ஊக்குவிக்குழு ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட தேதியில் கூட்ட வேண்டும்.

(இரண்டு மாதத்திற்கு குறைந்தது ஆறு கூட்டங்கள்) நமக்கு நாமே திட்டம் குழுவினால் வேலையின் முன்னேற்றம் மற்றும் பிரச்சினைகள் பற்றி சுருக்கமாக கூட்டக் குறிப்புகள் பதிவு செய்ய வேண்டும்.

II) பின்வரும் அலுவலர்களைக் கொண்டு மாவட்ட அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அமைக்கப்படும்.

| | |
|---|---|
| 1. மாவட்ட ஆட்சித்தலைவர் | பெருந்தலைவர் |
| 2. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | உறுப்பினர் / செயலர் |
| 3. அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் | உறுப்பினர்கள் |
| 4. அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் | உறுப்பினர்கள் |
| 5. மாவட்டங்களில் பணிகள் செயலாற்றும் தலைமை அலுவலர்கள் | உறுப்பினர்கள் |
| 6. பெருந்தலைவர், மாவட்ட ஊராட்சி | உறுப்பினர்கள் |
| 7. உதவி இயக்குநர் , பேரூராட்சி | உறுப்பினர்கள் |
| 8. நமக்கு நாமே திட்டம் செயலாற்றும் நகராட்சி பெருந்தலைவர்கள் | உறுப்பினர்கள் |
| 9. நமக்கு நாமே திட்டம் செயலாற்றும் நகராட்சி ஆணையாளர்கள் | உறுப்பினர்கள் |
| 10. ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள் | உறுப்பினர்கள் |
| 11. நமக்கு நாமே திட்டத்தில் பங்கேற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சார்பற்ற நிறுவனங்கள் | உறுப்பினர்கள் |

இந்தக்குழு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூட்டம் நடத்தி வேலைகளின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்வதோடு அதிகமாக கிராமங்களை நமக்கு நாமே திட்டத்தில் சேர்ப்பதற்கு ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**7. செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு :**

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நமக்கு நாமே திட்டத்தின் கொள்கைகளையும் வெற்றி சாதனைகளையும் செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகள் மூலம் தமிழ் பத்திரிகை, மின்னனுவியல். துண்டு பிரசுரங்கள் மூலம் விளம்பரம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**8. ஆவணங்கள் ஆக்குதல் :**

நமக்கு நாமே திட்டத்தைப் பற்றியும், மேற்படி திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் உள்ள நிலைப்பற்றியும் ஆவணங்களில் பதிவு செய்தல் முக்கியமான பணியாகும். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இத்திட்டப் பணிகளை நிறைவேற்ற எடுக்கப்பட்ட ஒவ்வொரு முயற்சிகளையும் தனியாக ஆவணங்களாக தயார் செய்ய வேண்டும். இதனைக் கொண்டு திட்டப் பணிகளினால் கிராம சமுதாயத்தில் ஏற்பட்ட நன்மைகளை விவாத கூட்டங்கள் மூலமும், புகைப்படங்கள் மற்றும் வீடியோ மூலம் மதிப்பீடு செய்வதுடன் விளம்பரம் செய்யலாம்.

**9. செயலாக்க நாட்காட்டி:**

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வேலையினையும் திட்டமிட்டு உறுதியாக்கி நிறைவேற்ற குறைந்தது இரண்டு மாதங்களிலிருந்து ஆறு மாதங்கள் தேவைப்படுகிறது. ஒரே நேரத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பணிக்கும் மேலாகவும் பணிகள் எடுத்துக் கொள்ளலாம். திட்டமிடுதலைத் தவிர, பணி உறுதியாக்கி நிறைவேற்றுதல் போன்ற செயல்கள் ஒரே நேரத்தில் பல கிராமங்களில் செய்ய வேண்டியிருக்கும். எனவே, ஒரு ஆண்டில் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஆறு சுற்றுப் பணிகள் எடுக்க முடியும். இதன்படி நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு ஆண்டில் குறைந்தது ஆறு கிராமங்களில் திட்டங்கள் துவக்கப்பட வேண்டும்.

**10. அறிக்கை அனுப்புதல்:**

ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சித்தலைவர் பணியினை ஆய்வு செய்து ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு குறிப்பிட்ட படிவங்களில் பணி முன்னேற்ற அறிக்கையினை ஒவ்வொரு மாதமும் 5–ம் தேதிக்கு முன்னராக அனுப்ப வேண்டும், வெற்றிச் சாதனைகள் புகைப்படங்களுடனும், விரிவான குறிப்புகளுடனும் ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலம் அரசுக்கு அனுப்பலாம் (மூன்று படிவங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.) ஊரக வளர்ச்சி இயக்குநர் எல்லா மாவட்ட முன்னேற்ற அறிக்கைகளையும் தொகுத்து தொடரும் மாதம் 10–ம் தேதிக்கு முன்னர் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவர் இத்திட்டத்தினை நிறைவேற்றும் செயல்திறன் மிக்க அலுவலர்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் குழுவினருக்கு தலைவராக இருந்து ஒவ்வொரு பணியினையும் திட்டமிடுதல், உருவாக்குதல் மற்றும் நிறைவேற்றுதல் போன்ற ஒவ்வொரு நிலையிலும் முழுமையாக ஈடுபட்டு மேலும் பல கிராமங்களில் இத்திட்டத்தின் நோக்கத்தினைப் பற்றி தெரிய செய்ய வேண்டும். அவர் அரசு சார்பற்ற நிறுவனங்கள், அறிவொளி தொண்டர்கள் மற்றம் இந்தப் பணிகளுக்கு பொறுப்பாக்கப்பட்ட அலுவலர் குழுவினர் மூலம் கிராமங்களில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்த வேண்டும். மேலும், ஒவ்வொரு பணியினையும் நேரடியாக ஆய்வு செய்து தீவிரமாக கண்காணிக்க வேண்டும். இந்தப் பணிகளின் சாதனைகளை நல்ல முறையில் விளம்பரப்படுத்தி மாவட்டங்களில் நிறைவேற்றப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் பொதுமக்களின் தடையற்ற பங்கேற்பினை நமக்கு நாமே திட்டத்தின் மூலம் உறுதி செய்ய வேண்டும். விரைவாக சமூக பொருளாதார மாற்றம் கிராம அளவில் ஏற்பட வேண்டுமானால் நமக்கு நாமே திட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமைப் பொறுப்பு ஏற்று நடத்தினால்தான் முடியும். நமக்கு நாமே திட்டத்தை நிறைவேற்றுவதில் சிறந்து பணியாற்றும் உள்ளாட்சி அமைப்புகள் தனியார் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு அவர்களுடைய சிறந்த பணிக்கு ஊக்கப்படுத்தும் வகையில் சிறப்புப் பரிசுகள் வழங்கலாம். இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ஊரக வளர்ச்சித் துறைக்கு கருத்துரு அனுப்பலாம்.

**படிவம் –1**

**நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள் பற்றிய விபரங்கள் ...... அன்று வரை**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | நமக்கு நாமே திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்ட ஒன்றியங்களின் எண்ணிக்கை | நமக்கு நாமே திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்ட ஊராட்சிகளின் எண்ணிக்கை | நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | | | நிதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | எடுக்கப் பட்டவை | தொடங்கப் பட்டவை | முடிக்கப் பட்டவை | முதலீடு | சாதனை |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | | | | | | | | | |

## படிவம் – II

## நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள் பற்றிய விபரங்கள் ...... அன்று வரை

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | நமக்கு நாமே திட்ட சிறப்பு நிதியின் கீழ் எடுக்கப்பட்ட திட்டங்கள் | | | | ஊரக மானியம் உள்ளாட்சி மன்ற நிதி | ஒட்டுமொத்தம் | மொத்தம் எடுக்கப்பட்ட பணிகள் | முடிக்கப்பட்டவை | ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டங்களில் எடுக்கப்பட்ட பணிகள் | | | | | | | | ஒட்டுமொத்தம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொதுமக்கள் பங்குத் தொகை | | | | | | | | பொதுமக்கள் பங்குத் தொகை | | | | ஊரக மானியம்உள்ளாட்சிமன்ற நிதி | ஒட்டுமொத்தம் | மொத்தம் எடுக்கப்பட்ட பணிகள் | முடிக்கப்பட்டவை | பணம் | பொருள் | உழைப்பு | மொத்தம் | ஊரக மானியம் உள்ளாட்சி மன்ற நிதி | ஒட்டுமொத்தம் | மொத்தம் எடுக்கப்பட்ட பணிகள் | முடிக்கப்பட்டவை |
| | | பணம் | பொருள் | உழைப்பு | மொத்தம் | | | | | பணம் | பொருள் | உழைப்பு | மொத்தம் | | | | | | | | | | | | |
| 1 | 2 | 3 அ | 3ஆ | 3இ | 3ஈ | 4 | 5 | 6 | 7 | 8அ | 8ஆ | 8இ | 9 | 10 | 11 | 12 | 13 | 14அ | 14ஆ | 14 இ | 15 | 16 | 17 | 18 | 19 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

## படிவம் – III

## நமக்கு நாமே திட்ட செயல்பாட்டின் முன்னேற்ற அறிக்கை (100% நன்கொடைகள் ) ... அன்றுவரை

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | 100% பொதுமக்கள் நன்கொடையுடன் எடுக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை வேலைகளின் தொகை எண்ணிக்கை | | 100% பொதுமக்கள் நன்கொடையுடன் தொடங்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | | 100% பொதுமக்கள் நன்கொடையுடன் முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வேலைகளின் எண்ணிக்கை | தொகை | வேலைகளின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை ... வரை | வேலைகளின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை .... வரை |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | | | | | | | |